சுபீட்சம்

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள

www.supeedsam.com

புதன்கிழமை 30.10.2024 supeedsam.com supeedsam@gmail.com







# எதிரிகளின் சவால்களுக்கு நாங்கள் அஞ்சப் பேவதில்லை பிள்ளையானுக்கு சவால் விடுத்துள்ள மோகன்



எதிரிகளின் சவால்களுக்கு நாங்கள் அஞ்சப் பேவதில்லை. பின் நிற்கப் போவதில்லை. உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். அரசியலுக்கு மட்டுமல்லாமல் அரசியலுக்கு அப்பால் எங்களது சொந்த முயற்சியிலும் உதவத் தயாரக இருக்கின்றோம். என மக்கள் மத்தியில் உரையாற்றும் போது சயேட்சை குழு வேட்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் படகு சின்னத்தில் போட்டியிடும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) சவால் விடுத்து தமது உரையினை நிகழ்த்தினார்.

02 ஆம் பக்கத்தில்...

# ஈ.பி.டி.பியின் கொள்கை வழிமுறையை ஏற்று தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்

ஈ.பி.டி.பி கட்சியின் கொள்கை வழிமுறையை ஏற்று அதனுடன் இணைந்து பயணிக்க தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும் எனஅக்கட்சியின்செயலாளர்நாயகமும்முன்னாள்கடற்றொழில்அமைச்சருமானடக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலணை பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளுக்கும்(29) விஜயம் மேற்கொண்ட ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஈ.பி.டி.பியின் வீணை சின்னத்தை வலுப்படுத்தும் முகமாக பல்வேறு பிரசார கூட்டங்களில் பங்கெடுத்திருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...











# இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டு மாவட்ட செயலாளர் டேஸ்மன் தோடர்பில் போலி செய்தி



ஜனாதிபதியின் ஆசிரியர் ஊழல் முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளராகவும், ஆசிரியர்கள் தவறிழைக்கும் பட்சத்தில் தன்னிடம் அது தொடர்பில் முறையிடலாம் எனவும் வாட்ஸப், முகநூல் மற்றும் சில சமூக வலைத் தளங்களில் பரப்பப்படும் செய்தி போலியானது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரான டெஸ்மன் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

02 ஆம் பக்கத்தில்...










## எதிரிகளின் சவால்களுக்கு நாங்கள் அஞ்சப் பேவதில்லை

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை குழு 13 இல் போட்டியிடும் வேட்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் தமது தேர்தல் பரப்புரை கல்குடா பொலிஸ் பிரிவின் பேத்தாழையில் இடம்பெற்றது. அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

உங்களுக்கு இதுவரை காலமும் நடந்தது என்ன? எதுவும் இல்லை. வெற்றுப் பேச்சுக்களும், வீரவசனங்களும், ஏமாற்று வித்தைகளும், தங்கள் சார் சார்ந்தவர்களுக்கு மாத்திரமே அபிவிருத்தி கிடைத்ததே தவிர உங்களுக்கு கிடைக்கவில்லை. இதற்கான மாற்று சக்தியாக நாங்கள் வந்திருக்கிறோம். உங்களுக்கு உதவுவதற்காக அரசியல்வாதிகள் பேசுவது போன்று வீரப்பேச்சுக்காக வரவில்லை.

கடந்த ஒரு வருட காலத்தில் எந்தவொரு அரசியல் பலம் அதிகாராம் இல்லாமல் ரணில் விக்கிரமசிங்க என்கின்ற ஒரு தனி மனிதனை தெரியும் என்பதற்காக 26 கோடி ரூபாய்களை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கொண்டு வந்து அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டிருந்தேன். அது தவிர பல வருட காலமாக எங்கள் சொந்த நிதியில் இருந்து ஏழை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காகவும், வறியவர்களுக்கும் ஏராளமான உதவிகளை செய்து வருகிறோம். இவையெல்லாம் எதற்காக தூர நோக்கு, நல்ல சிந்தனை, நல்ல சமூகம் நல்ல மாற்றம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமே. மாணவர்களின் கல்வியிலே நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்.16 மாணவர்களை தத்தெடுத்து பல்கலைக்கழகம் வரை கற்பித்துக் கொண்டிருக்கிறோம். பின்தங்கிய பாடசாலைகளில் கணித பாடங்களை அதற்கான ஆசிரியர்களை சொந்த பணத்தில் நியமித்து கற்பித்துக் கொண்டிருக்கிறோம். கல்வியில் சாதனை படைத்து எதிர்காலத்தில் எமது சமூகம் கற்றோர் சமூகமாக இருக்க வேண்டும் என்பதற்காக இவற்றையெல்லாம் செய்கின்றோம்.

எங்கள் சமூகம் நேர்தியாக சிந்திக்கின்ற சமூகமாக இருக்க வேண்டும் என்றால் அனைவரும் கற்றிருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் நூறு வீதம் கற்றிருக்க வேண்டும். இந்த கல்வியிலே மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் எங்களது தலையாய கடமையாக இருக்கிறது. நாங்கள் தெரிவு செய்யப்பட்டால் எங்களுக்கு கிடைக்கின்ற அனைத்து ஊதியங்களும், பாராளுமன்ற வருமானங்களும் ஏழை மாணவர்களுக்காக செலவிடுவோம் என்ற உத்தரவாதத்தினை சத்தியமாக உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

எமது சகோதர சகோதரிகளே நீங்கள் இத்தனை காலமும் பிறரை வாழ வைப்பதற்காக நீங்கள் வீழ்ந்தீர்கள் உங்களை வாழ வைக்க நாங்கள் வந்துள்ளோம். நாங்கள் அரசியல் வியாபாரிகள் அல்ல மக்கள் சேவகர்கள். எந்தவொரு வருமானமும் இல்லாமல், எந்தவொரு கொடுப்பனவும் இல்லாமல் எங்களுக்கு கிடைக்கின்ற அனைத்து கொடுப்பனவுகளையும் உங்களுக்கு கொடுத்து சேவை செய்ய வந்துள்ளோம்.

இன்று தமிழ் தேசியம் என்று பேசிக்கொண்டிருப்பவர்களால் உங்களுக்கு என்ன ஆனது. எதுவுமே இல்லை. ஆகக் குறைந்தது மாகாண சபை தேர்தலைக் கூட நடத்த முடியாத நிலையில்தான் அவர்கள் உள்ளனர். தங்கள் சுகபோக வாழ்க்கைக்காக சொந்த விருப்புக்காக சங்கென்றார்கள் வீடு என்றார்கள் வீடுமாறி சங்காக வந்தது, சங்கு மாறி வீடாக வந்தது. சங்கு சின்னம் உண்மையிலேயே முன்னாள் ஜனாபதி ரணில் விக்கிரமசிங்கவை வெல்லவைப்பதற்கு உருவாக்கப்பட்டது தான். பிள்ளையான் அவர்கள் சோளர் மின்சார உற்பத்திக்காக அபிவிருத்தி என்ற போர்வையில் தனியார் கம்பனி ஒன்றுக்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகரையில் விவசாயிகளின் காணிகளை வழங்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.

அவர்கள் என்னிடம் இது தொடர்பாக முறையிட்டதை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வு பெற்றுக்கொடுத்தேன். இதேபோன்று வாகரை பிரதேச செயலாளர் ஒருவரை இடமாற்றம் செய்தார். அங்குள்ள அரச காணிகளை கையகப்படுத்த முனைந்த போது அதனை தடுத்த பிரதேச செயலாளர்கள் எல்லாம் இடமாற்றம் செய்யப்பட்டனர். ஆகவே எதிரிகளின் சவால்களுக்கு எல்லாம் அஞ்சப் போவதும் இல்லை பின் நிற்கப்போவதும் இல்லை. நீங்கள் எங்களுடன் இணைந்து நில்லுங்கள். எதிர்காலம் சுபீட்சமானதாக இருக்க வேண்டுமென்றால் எதிர்வரும் 14 ஆம் திகதி யாரை தெரிவு செய்ய வேண்டும் என்பது நீங்கள் தான். எங்கள் மீது ஆர்வம் இருந்தால் பசு சின்னத்திற்கும் 3 ஆம் இலக்கத்திற்கும் புள்ளடி இடுங்கள் வாழ்க தமிழ் வெல்க தமிழ் எனக் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

## ஈ.பி.டி.பியின் கொள்கை வழிமுறையை ஏற்று தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்

இதன்போது கருத்து தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, மாற்றம் என்பது ஒவ்வொருவரிடமிருந்தும் நம்பிக்கையுடன் உருவாக்கப்பட வேண்டும். அதுவே சமூக மாற்றத்திற்கும் தமிழ் மக்களின் அரசியல் மாற்றத்திற்கும் வழி வகுக்கும் .

அந்த நம்பிக்கையுடன் கூடிய அரசியல் மாற்றம் ஈ.பிடி.பியை பலப்படுத்துவதாக இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலினூடாக சாத்தியமாகும் என்ற நம்பிக்கை தனக்குள்ளது. மேலும் சுமார் 30 வருடங்களாக என்னை நாடாளுமன்றம் அனுப்பிவரும் இம் மாவட்ட மக்கள் கடந்த தேர்தலிலும் என்னை வெற்றிபெறச் செய்தார்கள்.

இது ஈ.பிடி.பி கட்சிக்கு இதுவரை தமிழ் மக்கள் வழங்கிய அரசியல் அதிகாரங்களைக் கொண்டு முன்னெடுத்துவந்த சேவைகளுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

ஆனாலும் மக்கள் எமக்கு வழங்கிய அந்த சிறிய அதிகாரத்தை கொண்டு முடியுமானவரை பல்வேறு சேவைகளை செய்து காட்டியிருக்கின்றோம். அத்துடன் எமது கட்சி மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையினூடான தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்தி அதனூடாக தனது பொறிமுறையை நகர்த்தி வெற்றி கண்டுள்ளது.

இதே வேளை போலித் தேசியம் பேசி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து அதிகாரங்களை பெற்றவர்கள் தத்தமது வாழ்வியலையும் சுகபோகங்களையும் மெருகூட்டிக்கொண்டார்களே தவிர வாழும் மக்களுக்கு எதனையும் சாதித்துக் கொடுத்ததாக தெரியவில்லை. இதனால் தமிழ் மக்களும் சுயலாப போலித் தேசிய அரசியலை தூக்கி எறிந்துவிட்டு ஜதார்த பூர்வமான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த தயாராகிவிட்டனர்.

அதேநேரம் அரசியலில் குறிப்பாக சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதாக உறுதியளித்த தரப்பினரே இன்று எமது நாட்டின் ஆட்சிப்பீடத்தில் உள்ளனர்.

இதேநேரத்தில் மக்களுக்கும் நாட்டின் அரசியல் உள்ளிட்ட அனைத்து விடயங்களில் அக்கறை இருப்பது அவசியம்.

அதனால்தான் அரசியல் ரீதியாக செயற்படவும், சிந்திக்கவும் அதனூடாக போலிகளை அகற்றவும் மக்கள் முன்வர வேண்டும் என நான் பல காலமாக கூறிவருகின்றேன்.

அந்த மாற்றம் இப்போது தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளதை பார்க்க முடிகின்றது. அதுமட்டுமல்லாது அந்த மாற்றத்தை அக்கறையும் ஆற்றலும் உள்ளவர்களது கரங்களுக்கு வழங்குவதற்கும் அவர்கள் விரும்புவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக உண்மையான மாற்றத்தைத் தேடும் சுறுசுறுப்பான நடவடிக்கை என்பதே தமிழ் அரசியல் பரப்பில் தற்போதைய அவசிய தேவையாக உள்ளது. அது இந்த தேர்தலில் மிக அவசியமாக உள்ளது.

இதேநேரம் மக்கள் விரும்பும் இந்த அக்கறை, ஆற்றல், சிறந்த வழிகாட்டல் ஆகியவற்றை கொண்டுள்ள சக்தியாக எமது ஈ.பி.டி.பி கட்சியே இன்று தமிழர் அரசியல் பரப்பில் இருக்கின்றது. அதனால் எமது கட்சியின் கொள்கை வழிமுறையை ஏற்று அதனுடன் இணைந்து பயணிக்க தமிழ் மக்கள் அணிதிள வேண்டியது அவசியமாகும்.

அந்த அணிதிரள்வு இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டு மாவட்ட செயலாளர் டெஸ்மன் தொடர்பில் போலி செய்தி

எமது சங்கம் ஆசிரியர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அனைத்து அநீதிகளுக்கும் குரல் கொடுக்கின்ற அதேவேளை மாணவர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளுக்கும் குரல் கொடுக்கவேண்டிய கட்டாயம் உள்ளது.

இவ்வாறு மாணவர்களுக்கு எதிராக செயற்பட்ட ஆசிரியர் தொடர்பிலும் எங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அது தொடர்பில் எமது சங்கமானது மாவட்ட கல்வி உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதோடு அது தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் ஒரு பகுதியாகவே ஆசிரியர்கள் தொடர்பிலும் கிடைக்கும் முறைப்பாடுகளை கொழும்பிலுள்ள எமது ஆசிரியர் சங்கத்திற்கும் தெரிவிக்கின்றோம் என ஒரு குரல் பதிவு மூலம் ஆசிரியர்களுக்கு தகவல் வழங்கியிருந்தேன்.

இவ்வாறு நான் பதிவிட்ட குரல் பதிவானது பலருக்கும் பகிரப்பட்டது மட்டுமல்லாமல் இந்த குரல் பதிவை விளங்கிக்கொள்ளாத சிலர் தங்களுடைய முகப்புத்தகத்தில் என்னை ஜனாதிபதி செயலணி என்றும் ஜனாதிபதியின் ஆசிரியர் ஊழல் முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் எனவும் சித்தரித்து ஒரு போலி செய்தியை எனது தொலைபேசி இலக்கங்களுடன் சேர்த்து பதிவிட்டுள்ளனர்.

உண்மையில் இவ்வாறு வரும் முறைப்பாடுகளை மேல குறிப்பிட்டது போல மாவட்ட கல்வி உயரதிகாரிகளுக்கும் கொழும்பிலுள்ள எமது சங்கத்திற்கு மட்டுமே தெரியப்படுத்தப்படுவதாகவும் எந்த காரணம் கொண்டும் அது எனது தனிப்பட்ட ரீதியாக ஜனாதிபதிக்கோ அல்லது ஜனாதிபதி செயலகத்திற்கோ தெரிவிக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேசமயம் இது உண்மைக்கு புறம்பான செய்தியென்றும், தேர்தல் காலங்களில் அரசியல் செய்யும் சிலர் தமது சங்கம் மீது பிழையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கவே இவ்வாறான செய்திகள் பரப்பப்படுவதாக தெரிவித்த அவர் இவ்வாறு குரல் பதிவுகள் வரும் போது நன்றாக புரிந்துகொண்டோ அல்லது விடயத்தை உறுதிசெய்து கொண்டோ தகவலை வெளியிடுவது சாலச்சிறந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார்



# ஜனாஸா எரிப்புக்கு துணைபோன துரோகிகள்

## முகமது ரஸ்மின்

(பாறுக் ஷிஹான்,(வி.ரி. சகாதேவராஜா)

ஹரீஸ் எம்பி 20 க்கு கை தூக்கிய காரணத்தினால் இம் முறை வேட்பாளர் வழங்கப்படவில்லை. சரி, அப்படி என்றால், பைசல் காசிம் என்ன 200 க்கா கை தூக்கியவர் ? அவருக்கு எப்படி சீற் வழங்கியது?

இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் நல்லாட்சி தேசிய முன்னணியின் ஆதரவு வி ஆ வண் ( we are one) அமைப்பின் இணைப்பாளர் முகம்மட் ரஸ்மின்

அம்பாறை ஊடக மையத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு சமகால அரசியல் தொடர்பாக நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் ஆக்ரோசமாக மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் தமிழ் பேசும் சமூகங்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. இது வரை இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அவற்றுக்கு எந்த தீர்வையும் காணவில்லை. அரசியலுக்காக பிச்சைக்காரனின் புண் போல அதைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டிற்கு தரமான தலைவர் அனுர கிடைத்துள்ளார். நாட்டுக்கு தேவையான நல்ல தலைவரை தேர்வு செய்யுங்கள் என்று அன்று அவர் கூறினார். இப்பொழுது கூறுகிறார் உங்களுக்கு தேவையான உங்கள் தலைவர்களை தேர்வு செய்யுங்கள் என்று. அதுதான் உண்மை .

இப்பொழுது பாராளுமன்றத் தேர்தல் வந்திருக்கிறது. எமக்கு தேவை உண்மையாக தலைவர்கள்.




அறுகம்பை சம்பவத்திற்கு இதுவரை யாருமே வாய் திறக்காதது ஏன்? பொத்துவிலில் உள்ள முஷாரப்பே வாய் திறக்கவில்லை.

என்ன அனுரவிற்கு பயந்து நிற்கிறீர்களா? அல்லது தமது இருப்பு கேள்விக் குறியாக போகும் என்று நினைக்கிறீர்களா?

இவர்களா தலைவர்கள்? கடந்த காலங்களில் எமது தலைவர்களாக இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும். தயவு செய்து சமூகத்துக்கு உதவி செய்ய வேண்டுமாக இருந்தால் இந்த போட்டியில் இருந்து ஒதுங்கி கொள்வது நல்லது .புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

சமூகத்துக்கு முழுக்க முழுக்க அசிங்கத்தை அள்ளித்தந்தவர்கள் எமது இஸ்லாமிய தலைவர்கள் .ஜனாஸா எரிப்புக்கு துணை போன இவர்கள் இனத்துரோகிகள் .

ஹக்கீம் 20 வருட காலம் எம்பியாக இருந்து சாதித்ததென்ன?20க்கு கை தூக்கியதன் பலன் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. அப்போது காபிஸ் நசீர் சொன்னார் 150 பெட்டிகளை எரிக்கப்பட்டன ஜனாஸா இல்லை என்று.அதனையும் ஹக்கீம் கைகட்டி பார்த்துக் கொண்டிருந்தார். மன்னிக்க முடியாது .

ஈஸ்டர் தாக்குதலில் 2500 இஸ்லாமிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். தலதா மாளிகை முன்பாக பௌத்தப்பிக்குமார் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதனை அடுத்து முஸ்லிம் எம்பிக்கள் பதவி பதவி விலகினார்கள். ஆனால், வெறும் 13 நாட்களின் பின்னர் மீண்டும் பதவியேற்றார்கள்.

எப்படி இவர்களின் நாடகம்?அவர்களுக்கு அரசியல் அதிகாரம் என்பது சேட் போடுவது மாதிரி. சரி இந்த அதிகாரத்தை வைத்து சமூகத்துக்கு என்ன செய்தார்கள். ?

திகன கலவரம் அழுத்கம கலவரம் அக்குரனை கலவரம் நீதி கிடைத்ததா? இல்லை. ஒரு வெள்ள பாதுகாப்பை தானும் ஏற்படுத்த முடிந்ததா? இல்லை . மேடைகளில் குர்ஆன் ஹதீஸ் முழங்குகிறார்கள் . வெட்கமா இல்ல.

மக்களே இனம் கண்டு இவர்களை விரட்ட வேண்டும் .ஹக்கீம் என்றாவது சமூகத்துக்காக எங்காவது கோட்போட்டு நீதிமன்ற போனாரா? இல்லை.

பிஎவ்எஸ் ரணில் போன்றோருக்கு ஆதரவாக மட்டுமே கோட் ஏறினார். அம்பாறை திகன அளுத்கம வேருவல இப்படி முஸ்லிம் சமூகத்துக்காக கோட் ஏறினாரா? இல்லை .

இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. இவர்களை நார் நாராய் கிழித்து தொங்கவிடுவோம்.முகா சொல்கிறது ஒன்பது இடங்களில் வெல்வோம் என்று.மயில் சொல்கிறது பத்து இடங்களில் வெல்வோம் என்று .முதலில் முடிந்தால் உங்கள சொந்த ஆசனத்தை காப்பாற்றிக் கொள்ளுங்கள் பார்க்கலாம் .

எமது நல்லாட்சி தேசிய முன்னணியில் பணம் இல்லை பதவியில்லை.வாகனமில்லை. லஞ்சம் இல்லை ஊழல் இல்லை.

நாங்கள் இன்று கொழும்பிலிருந்து எங்கட காசில் வந்திருக்கிறோம் எங்கட பணத்தில் தான் பேசிக் கொண்டிருக்கின்றோம் பயணம் செய்கின்றோம்.

ஆனால் எங்களிடம் இருப்பதெல்லாம் உண்மை நேர்மை.

தேசிய ரீதியிலே மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல் பிராந்தி ரீதியிலும் அத்தகைய மாற்றம் தேவை. எனவே இந்த பழைய ஏமாற்றுப் பேர்வழிகள் இனத்துரோகிகள் அனைவரையும் துரத்தியடித்து புதிய நல்ல முகங்களைத் தேர்ந்து ஊழலற்ற அரசாங்கத்தை ஏற்படுத்த மக்களே நீங்கள் உதவி செய்ய வேண்டும். என்றார்.

# தேர்தல் கடமை மேற்பார்வை பயிற்சி செயலமர்வு!!







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பாராளுமன்ற பொது தேர்தல் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி.ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம் பெற்ற மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (29) திகதி இடம் பெற்றது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடையங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக தெளிவூட்டப்பட்டது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்டபடி அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறும்

(எஸ்.எஸ்.
அமிர்தகழியான் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு தினங்ளில் எந்த மாற்றமும் இல்லையெனவும், ஏற்கனவே திட்டமிட்ட தினங்களில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறுமெனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14 திகதி இடம் பெறவுள்ள பாராளுமன்ற பொது தேர்தலை முன்னிட்டு இன்றய தினம் (30) திகதி தபால் மூல வாக்களிப்பிற்காக மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையங்கள் மற்றும் தேர்தல் அலுவலகம் ஆகியவற்றில் தபால் மூல வாக்களிப்பு இடம் பெறுவதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், குறித்த தினங்களில் மாற்றம் ஏற்படவுள்ளதாக போலிச் செய்திகள் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் நிலையில், அவ்வாறான செய்திகள் உண்மைக்குப் புறம்பான செய்திகள் எனவும், ஏற்கனவே திட்டமிட்டபடி தபால் மூல வாக்களிப்பிற்காக தேர்தல் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட தினங்களில் குறித்த காரியாலயங்களில் தபால் மூல வாக்களிப்பு இடம் பெறும் எனவும், தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பித்த உத்தியோகத்தர்கள் குறித்த உண்மைக்கு புறம்பான செய்திகளை நம்ப வேண்டாம் எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம்.பீ.எம்.சுபியான் ஆகிய இருவரும் தெரிவித்துள்ளனர்.



# கல்முனை கார்மேல் பற்றிமா 2007 அணியினர் உதயம்







( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கின் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் 2004 O/L மற்றும் 2007 A/L மாணவர்களின் ஒன்று கூடலானது சு 20 வருடங்களின் பின் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நிகழ்வு பாடசாலை முன்றலில் நடைபெற்றது .

அது நினைவுகளை மீட்டுப் பார்க்கும் நேரமாகவும் அமைந்தது.

அதன் பின்னர் ஒரு கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் நோக்கில் ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பும் உருவாக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பாடசாலை மற்றும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் சிறப்பாக ஈடுபட உள்ளதாக முடிவெடுக்கப்பட்டது.

புதிய நிருவாக சபை விபரம் வருமாறு.

தலைவர் : சிந்துஜன்
செயலாளர் : சுரேஸ்
பொருளாளர் : ரசிதரன்
உப தலைவர் : தரணிதரன்
உப செயலாளர் : டனிஸ்கரன்
கணக்காய்வாளர் : குவைஸ்
கொழும்பு இணைப்பாளர்கள் : ரவுஷான் , அஸ்ரப்
மத்திய கிழக்கு இணைப்பாளர்கள் : நப்றிஸ் , அண்டனி
வெளி நாட்டு இணைப்பாளர்கள் : குமுதன் , சசி
நிர்வாக குழு உறுப்பினர்கள் : நிகாசன் , நிரூசன் , இர்ஷாத் , பிரசாத் , ஜீவன்

# தம்பலகாமத்தில் ஆசிரியர் தின நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் 26.10.2024-சனிக்கிழமை ,காலை 10.30 மணியளவில் தம்பலகாமம், குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் இந்நிகழ்வு ஆசிரியர் தின நிகழ்வு இடம்பெற்றது. இதனை தம்பலகாமம் முன்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் பிரதம விருந்தினர்களாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, பாலர் பாடசாலை கல்விப்பணியக செயலாற்றுப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர், தம்பலகமம் கோட்டக்கல்விப்பணிப்பாளர், முன்பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர், திருமதி. தில்லைநாதன் ஆசிரியை, குளக்கோட்டன் வித்தியாலய அதிபர், போதகர் ராஜா, தம்பலகமம் பொலிஸ் அதிகாரிகள், ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கு 25 முன்பள்ளி ஆசிரியைகள் வருகை தந்திருந்தனர்.பாடசாலை மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன் போது மேடையேற்றப்பட்டன.

# மாணவர்கள் கௌரவிப்பு





(எச்.எம்.எம்.பர்ஸான்)

கடந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்கள பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட காவத்தமுனை அல் அமீன் வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு (28) திங்கட்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.ருபாய்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட வை.எம். அஷ்பாக், ஏ.சீ.எம்.இம்தாத், ஏ.ஆர்.எம்.ஹனான், ஆர்.எப்.எப். வபா, ஏ.எஸ்.எப்.றிபா, ஏ.எல்.சிப்னா ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இம் மாணவர்களை பாராட்டும் நிகழ்வினை பாட ஆசிரியரான எம்.எம்.செய்னுதீன் ஏற்பாடு செய்திருந்ததோடு, மாணவர்களினால் பாடசாலை வளாகத்தினுள் சிங்கள எழுத்துக்கள் அடங்கிய குழு வேலைத்திட்டமும் நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை ஊடக திறனாய்வு போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு மூன்றாம் இடம்





(நூருல் ஹுதா உமர்)

மொரட்டுவ பல்கலைக் கழகம் மற்றும் சிரச ஊடக வலையமைப்பு இணைந்து நடத்திய அகில இலங்கை ஊடக திறனாய்வு போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரியின் உயர்தர பிரிவு மாணவன் எம்.ஆர்.எம். றிமாஸ் அறிவிப்பாளர் போட்டியில் கலந்து கொண்டு அகில இலங்கை ரீதியாக 3ம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ள மாணவனை பாராட்டுவதோடு இப் போட்டிக்காக இம் மாணவனை வழிப்படுத்தி தயார் படுத்திய பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் யு.எல்.எம். ஹிலால் அவர்களுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாக அதிபர் எம்.ஐ. ஜாபீர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை!

## ஒரு தெளிவுக் கட்டுரை



நாடெங்கிலும் உள்ள ஆசிரியர்களின் கற்றல்,-கற்பித்தல் செயற்பாட்டினை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் நோக்குடன் ஆசிரியர்களுக்கு மிக நெருக்கமாக நின்று தொழில்வழிப்படுத்தும் கடமையை மேற்கொள்பவர்களே ஆசிரிய ஆலோசகர்கள் ஆவர். ஆசிரிய ஆலோசகர்கள் முதன்மை ஆசிரியர்கள் என்றும் சில நாடுகளில் அழைக்கப்படுகின்றனர்.

பல வருட காலமாக எதிர்பார்க்கப்பட்டுவந்த இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை( Srilanka Teachers Advisor service) கடந்த வருடம் ஸ்தாபிக்கப்பட்டது.

கல்விப் புலத்தில் இலங்கை கல்வி நிருவாக சேவை இலங்கை கல்வியியலாளர் சேவை இலங்கை அதிபர் சேவை இலங்கை ஆசிரியர் சேவை என்பவற்றுக்கு மேலதிகமாக தற்போது இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையும் நடைமுறைக்கு வந்துள்ளது.

புதிய சேவை ஆதலால் அச் சேவை தொடர்பாக சில தெளிவுகளை வழங்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஆசிரியர் ஆலோசகர் சேவையின் பதவி யானது பொதுச்சேவை ஆணைக்குழுவின்கல்விச்சேவை குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைப்பிரமாணக்குறிப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

இச்சேவையில் தரம் - II,I வகுப்புக்கள் மட்டுமே உண்டு. தரம்-II இல் இருந்து தரம்-ஐ க்கு பதவி உயர்வு பெறுவதற்கு தரம் - II இல் 10 வருட சேவை பூர்த்தியுடன் ஆங்கிலம், சிங்கள மொழிச்சித்தியுடன் கல்வி தொடர்பான ஆய்வுக்கட்டுரை ஒன்றினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரமாணக்குறிப்பின் படி மொத்த ஆசிரியர் ஆலோசகர்களின் எண்ணிக்கை 4471 ஆகும். இவர்கள் 28 பாடங்களுக்குரிய ஆலோசகர்களாகும். இதில் தமிழ் மொழி ஆசிரியர் ஆலோசகர்களின் எண்ணிக்கை 1283 ஆகும்.



இச்சேவைக்கான விண்ணப்பம் கோரப்படும் சமயம் 10 வருட கற்பித்தல் அனுபவத்துடன் இலங்கை ஆசிரியர் சேவை 1 அல்லது 2-1 உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். இதற்கு பட்டத்திலுள்ள பாடத்துடன் 10 வருடம் உரிய பாடத்தினை கற்பித்த அனுபவத்தினை கொண்டிருக்க வேண்டும்.

இச்சேவைக்குரியவர்களை தெரிவு செய்யும்போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் தேசியரீதியாக நடாப்படும்.

50 வயதை தாண்டியவர்கள் விண்ணப்பிக்க முடியாது. இச்சேவையைச் சேர்ந்தவர்கள் கோட்டக் கல்வி அலுவலகம் அல்லதுவலயக் கல்வி அலுவலகங்களில்கடமையாற்றலாம்.

இவர்களின் பாடசாலை தரிசிப்பு மற்றும் ஆற்றிய கடமையினை பதிவிடுவதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும். 'கல்வி அபிவிருத்தி பதிவுகுறிப்பு 'எனும்தலைப்பில்

இச்சேவையைச் சேர்ந்தவர்களுக்கான குறிப்பு புத்தகம் தணியாக பேணப்படல் வேண்டும்.

இவ்வாவணம் இவர்களுடைய வரவை உறுதிப்படுத்தும் ஆவணம் என்பதனால் அதிபர்கள் இவர்களின் வரவினை தனியாக உறுதிப்படுத்தவேண்டிய அவசியமில்லை. வரவுச்சான்றிதழ் வழங்க வேண்டியதும் இல்லை.

மாதம் ஒன்றுக்கு 10 நாட்கள் பாடசாலை தரிசிப்பினைமேற்கொள்ளலாம். ஏனைய நாட்களில் அலுவலக கடமையாகும். பாடசாலை தவணை விடுமுறைக்காலத்தில அலுவலகத்திற்கு சமூமளிக்கவேண்டும். பாடசாலை தரிசிப்புக்கு கொடுப்பனவுண்டு.

இச்சேவையைச் சேர்ந்தவர்கள் பாடசாலை மேற்பார்வை மற்றும் நிருவாகக் கடமை களில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

**வி.ரி.சகாதேவராஜா**
**(Rt-d. ADE)**
**காரைதீவு நிருபர்**



# தென்மராட்சி வாக்குகளை கூறுபோடுவதில் பலர் குறியாக உள்ளனர்;
# இம்முறை தென்மராட்சிக்கு பிரதிநிதி கிடைக்கும்

(த.சுபேசன்)

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தென்மராட்சித் தொகுதி வாக்குகளை கூறுபோட்டுப் பிரிப்பதில் பலர் குறியாக இருந்தாலும் இம்முறை தென்மராட்சித் தொகுதிக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பது உறுதி என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும்-ஜனநாயக தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

28/10 திங்கட்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பல வருடங்களாக தென்மராட்சித் தொகுதிக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லை.இம்முறையும் அதனை கிடைக்காமல் செய்ய பலர் முயற்சிக்கின்றனர்.



ஆனால் நாம் இம்முறை தென்மராட்சிக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்வதில் உறுதியாக இருக்கிறோம்.

கடந்த முறை உடுப்பிட்டித் தொகுதியை வெற்றி பெற்று அங்கு மேற்கொண்ட அபிவிருத்தி போன்று இம்முறை தென்மராட்சித் தொகுதியையும் வெற்றி கொண்டு நீண்ட காலமாக தென்மராட்சியில் நிலவிய பாராளுமன்ற உறுப்பினர் பற்றாக்குறையை தீர்த்து வைப்போம்.

கடந்த தேர்தலில் நாம் தென்மராட்சித் தொகுதியை வெற்றிபெறாவிட்டாலும் கூட ஜயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எம்மை ஆதரித்திருந்தனர்.

அந்தவகையில் தென்மராட்சியிலும் நாம் பல அபிவிருத்தித் திட்டங்களை கடந்த ஐந்து வருடங்களில் முன்னெடுத்திருந்தோம்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஏதோவொரு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.அந்த உரிமையோடு நாம் மக்களை அணுகிறோம் என மேலும் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

# கிழக்கில் 5 பிரதிநிதிகளை பெறுவோம்!
## ஊடக சந்திப்பில் த.ம.வி.புலிகள் முதன்மை வேட்பாளர் சர்வானந்தன் சூளுரை

( வி.ரி. சகாதேவராஜா)

எமது தலைவர் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கிழக்கு மாகாணத்தில் இம் முறை 5 பாராளுமன்ற உறுப்பினர்களை நிச்சயமாக பெறும். இதில் சந்தேகமேயில்லை.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளர் பொறியியலாளர் தேவராஜன் சர்வானந்தன் தெரிவித்தார்.

காரைதீவில் அமைந்துள்ள அம்பாறை ஊடக மையத்தில் நேற்று(29) இவ் ஊடகச்சந்திப்பு இடம்பெற்றது.

அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது ..

பேரினவாத கட்சிகளை விட தமிழ்க் கட்சியே எமது தெரிவாக இருக்க வேண்டும். அதிலும் கிழக்கு தலைமையைக் கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தான் எங்களுக்கு உரிய ஒரே தெரிவு. எமது தலைவர் பிள்ளையான் மிகவும் ஆளுமையானவர். எமக்கு உறுதுணையாக இருப்பார்.

இதை உணராவிட்டால் கிழக்கு மக்கள் தலையில் மண்ணை அள்ளிப் போட்ட நிலைமைதான் உருவாகும்.

எனது கட்சியின் தலைவர் ஆளுமை மிக்கவர். இம்முறை அம்பாறை திருகோணமலை போன்ற பகுதிகளிலும் போட்டியிடுகின்றோம். நிச்சயம் நான் இங்கு வெற்றி அடைவேன்.

சில தமிழ்க் கட்சிகள் சீசனுக்கு வந்து செல்லும் கட்சியாக இருக்கின்றது. அவர்களை நம்ப வேண்டாம். எனது பிறந்த தேதியே வேட்பாளர் இலக்கமாக வந்திருக்கிறது. அதில் எனக்கு சந்தோஷம்.

எமது கட்சியில் கிழக்கு மாகாணத்தில் 25 பேர் போட்டியிடுகிறார்கள் அதில் நாங்கள் ஐந்து பேர் கட்டாயம் வெற்றி அடைவோம்.

எனது தேர்தல் விஞ்ஞானம் இது தான்.

### கொள்கை பிரகடனம்

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் திகாமடுள்ள (அம்பாறை) மாவட்டத்தில் கல்முனை தொகுதி சார்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி படகுச் சின்னத்தில் 5 ஆம் இலக்கத்தில் நான் போட்டியிடுகிறேன்.

எனது கொள்கைப் பிரகடனமானது பின்வருமாறு...

1) கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை பூரணப்படுத்துதல்.

2) கல்முனை மற்றும் சம்மாந்துறை வலயங்களில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளை ஒன்று சேர்த்து புதிய கல்வி வலயம் ஒன்றை அமைத்தல்.

3) கல்முனையில் தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்களை மேலும் வளரச்செய்வதற்கு கலாச்சார மண்டபம் ஒன்றினை அமைத்தல்.



4)அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினை, கட்டுமானத்திலும், நிதி வளத்திலும், மனித வளத்திலும் மேலோங்கச் செய்தல்.

5) கல்முனையில் கல்முனை வடக்கு வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்துதல். அதற்குத் தேவையான கட்டுமானங்களையும், மனித வளத்தையும், அதி விசேட சிகிச்சை நிபுணர்களையும் கொண்ட சிறந்த வைத்திய சாலையாக உருவாக்குதல். மற்றும் திருக்கோவில் வைத்தியசாலையை கல்முனை வைத்தியசாலையின் தற்போதைய தரத்திற்கு தரம் உயர்த்துதல்.

6) அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் தமிழ் பிரதேச செயலகங்கள் , பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பாதைகள், வீதிகள் , வடிகான்களை புனரமைத்தலும் மீள் நிர்மாணம் செய்தலும், மற்றும் வீதி விளக்குகளை நிர்மாணித்தலும்.

7) கல்முனை , பாண்டிருப்பு பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற திரௌபதை அம்மன் ஆலயம் , திருக்கோவிலில் பிரசித்தி பெற்ற சித்திர வேலாயுதர் முருகன் ஆலயம் மற்றும் வீரமுனையில் பிரசித்தி பெற்ற சிந்தயாத்திரை பிள்ளையார் ஆலயம் போன்றவற்றிக்கான அலங்கார வளைவுகளை பெரும்வீதியில் அமைத்தல் .

8) தமிழர் பிரதேசங்களில் உள்ள விவசாயக் காணிகளுக்கான குளங்களை புனரமைத்து கொடுத்தல்.

9) அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, திருக்கோவில், தம்பிலுவில்,பொத்துவில் மற்றும் ஆலையடி வேம்பு போன்ற பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை அமைத்து கொடுத்தல்.

10) எமது அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பட்டதாரிகள் பட்டப்படிப்பின் பின்பு அகில இலங்கை சேவைகளுக்குள் உள்வாங்கப்படுவதற்கான பயிற்சி நெறிகளை வழங்கும் முகமாக அதற்குரிய பூரண கல்வி நிலையம் ஒன்றை உருவாக்குதல்.

11) சாதாரண தர மற்றும் உயர் தர கற்கையிலிருந்து இடை விலகும் மாணவர்களுக்காக கட்டிட நிர்மாண துறையில் பயிற்சிகளை வழங்கும் நிலையங்களை அமைத்து வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு தயார்படுத்தல்.

12) தமிழர்கள் பயன்படுத்திய பாரம்பரிய வயற்காணிகள், அரச காணிகளை மீளகையகப்படுத்தல்.

13) கல்முனை மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள நகரில் வசிப்பவர்களோ அல்லது இந் நகரில் பிறந்தவர்களோ கல்முனைப் பிரதேச அரச திணைக்களங்களில் அல்லது நிறுவனங்களில் நிறைவேற்றுத் தரத்திலும் தலைமைப்பதவியிலும் நேர்மையுடன் வெளிப்படைத்தன்மையுடனும் இருப்பதினை உறுதிப்படுத்துதல்.

14) அம்பாறை மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களான கல்முனை, நாவிதன்வெளி, காரைதீவு, சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் E-Library ஐ அமைத்தல் வேண்டும்.

15) நன்னீர் மீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன்பிடிகளை அபிவிருத்தி செய்தலும் நவீனமயப்படுத்தலும்.

16) அம்பாறை மாவட்ட தமிழ்க்கிராமங்களின் கடற்கரையோரங்களில் வசிக்கும் மக்களையும் அவர்களுடைய நிலத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

17) அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க்கிராமங்களில் சுற்றாடலின் சுகாதாரத்தை பேணுவதோடு சுற்றுலாத்துறையை விருத்தி செய்து அதன் மூலம் வருமானம் பெறல்.

18) வீரமுனை தொடக்கம் துறை நீலாவணை வரையான கிட்டங்கி வாவியை சுற்றுலாத்துறையில் மேம்பட அபிவிருத்தி செய்தல்.

# தென்மராட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு
# வடமராட்சி- வலிகாம மக்களும் உதவ வேண்டும்

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேசத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு வடமராட்சி மற்றும் வலிகாமம் மக்களும் உதவ வேண்டும் என யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற வேட்பாளர் ம.நடனதேவன்



வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தென்மராட்சிப் பிரதேசம் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் அபிவிருத்தி அடையவில்லை. தென்மராட்சிப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஒன்று இம்முறை கட்டாயம் தேவை.

தென்மராட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு தென்மராட்சி மக்கள் மாத்திரமன்றி-வலிகாமம் மற்றும் வடமராட்சி மக்களுடைய ஒத்துழைப்பும் தேவையாக உள்ளது.

அவர்கள் தமது விருப்பு வாக்கினை தென்மராட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு வழங்குவார்கள் என நம்புகிறேன்.

கடந்த 1996ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது தென்மராட்சி மக்கள் வலிகாமம் மற்றும் வடமராட்சி மக்களை அரவணைத்திருந்தனர். அந்த விதத்தில் தென்மராட்சி மற்றும் வடமராட்சி-வலிகாம மக்களுக்கிடையே நல்லதொரு புரிந்துணர்வு உள்ளதென மேலும் அவர் மேலும் தெரியப்படுத்தியிருந்தார்.

# மருதமுனை நூலகத்தில் ‘கீறல் சஞ்சிகை’ அறிமுக விழா





(அஸ்லம் எஸ்.மௌலானா)

2024 ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வுகளில் ஓர் அங்கமாக ''கீறல்'' சஞ்சிகையின் 11 ஆவது இதழ் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கவிஞர் சட்டத்தரணி ஏ.எல். றிபாஸ் (அலறி) பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது கீறல் சஞ்சிகையின் ஆசிரியர் அஸிஸ் எம்.பாயிஸ், நிகழ்வில் பங்கேற்றிருந்த அதிதிகள் மற்றும் கலை, இலக்கியவாதிகளுக்கு சஞ்சிகையின் சிறப்பு பிரதிகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கவிஞரும் விமர்சகருமான ஜெஸ்மி மூஸா, வாசகர் வட்டத்தின் தலைவர் கவிஞர் விஜிலி மூஸா, எழுத்தாளர்களான ரகுமான் ஏ.ஜமீல், டீன் கபூர், கல்முனை சமீம், எஸ்.ஏ. கப்பார், இசட்.எம். நிலாம் நழீமி, மாஜிதா தௌபீக், நிஷா இஸ்மாயில், ஜெசிமா முஜீப், பத்ரு நிஷா, சுமையா ஜெஸ்மி, எஸ்.முன்சிலா, மலீஸ் அமீன் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகத்தில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 1995 அக்டோபர் யாழ்ப்பாண இடப்பெயர்வு: வலிகள் சுமந்து, வழி தேடிய வரலாற்றுத் துயரம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(1995-ம் ஆண்டு அக்டோபர் 30இல் அவலமிகு யாழ் இடப்பெயர்வின் வலிசுமந்த நாட்களின் நினைவாக)**

உலக வரலாற்றில் எந்த ஒரு இனமும் சந்தித்திராத பாரிய இடப்பெயர்வை யாழ் மக்கள் சந்தித்தார்கள். 1995-ம் ஆண்டு அக்டோபர் 30-ந் தேதி இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வு மானுட வரலாற்றில் வலிசுமந்த வரலாறாகவே என்றும் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்து இலட்சம் ஆகும்.






குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளினூடாக ஐந்து இலட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

மிகச்சரியாக இன்றைக்கு 29 வருடங்களின் முன் யாழ் இடப்பெயர்வானது 1995 அக்ரோபர் 30இல் நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர நாட்கள் மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. எத்தனையோ ஆண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணை விட்டு இடம்பெயர்வார்கள் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.



### துயர வலிசுமந்த வரலாறு :

இந்த துயரத்தை எக்காலத்தினாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது.

யாழ் இடம்பெயர்வின் போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா என வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாட்களாகும்.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்த கொடுமை மிக்க காலமாகும்.

### வலிகள் சுமந்து வழி தேடிய இடப்பெயர்வு :

'சூரியக் கதிர்' ராணுவ நடவடிக்கைகள் போல தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தது அல்ல. இந்த சூரியக்கதிர் நடவடிக்கை 1995 அக்டோபர் 17 ல் தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களிலிருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத்தரப்பினர் போரினைத் தொடங்கியிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி

பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருப்பதாக கருதி பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில் , அன்றைய கும்மிருட்டினில் அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமான குண்டு வீச்சினாலும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடியும் நிலையிலிருந்தும், வெட்ட வெளிகளில் பல

மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர். மூட்டை முடிச்சுக்களை கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப்போனது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாட்களை கழித்தனர்.




"சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கையினை தொடர்ந்து 1995-ம் ஆண்டு ஐப்பசி 30ம் திகதி 500,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இது தமிழர்கள் தம் வரலாற்றில் சந்தித்த மிகப்பாரிய இடப்பெயர்வாக கொள்ளப்படுகின்றது.

oorukaai

### வலிசுமந்த வரலாற்றை யார் மறப்பர் ?

அன்றைய யாழ் மக்களின் இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக்குள்ளான வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உலக வரலாற்றில் யாழ் மக்களின் துயரமிகு இடப்பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தித்திருக்க மாட்டார்கள்.

ஆர்மேனிய மக்களின் வரலாற்றில் நடந்த மிகப்பெரிய துயரமான 1915 இனப்படுகொலை சம்பவங்கள் போல் 1995 யாழ் இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில் இடம்பெற்றது.

1995 சூரியக்கதிர் நடவடிக்கை எனும் அந்தக் கொடிய யுத்தத்தால், யாழ்ப்பாணம் தீவிர யுத்த காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்ட அந்த வலி, அதே வலி இன்னமும் தமிழ் மக்கள் மனதிலிருந்து நீக்கப்படவில்லை.

எத்தனை ஆண்டு காலமாக போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் தமிழர்கள் இன்னும் விடுதலைக்காய் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.







# அரசாங்க உத்தியோகத்தர்களே நீங்கள் எனக்கு அளிக்கப்போகும் தபால் வாக்கு...



எம் மக்களுக்காக அன்றே எங்கள் வாழ்வினை அர்ப்பணித்தவர்கள் நாம். மக்கள் பணி என்பதை எங்கள் உள்ளத்தில் நிறுத்தி உயிரைத் துச்சமென நினைத்து களத்தில் நின்றவர்கள் நாம். அரச உத்தியோகத்தர்களே நீங்கள் எனக்கு அளிக்கப்போகும் தபால் வாக்கில் ஒட்டு மொத்த முன்னாள் போராளிகளின் அர்ப்பணிப்பையும் நனவாக்குங்கள் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும், முன்னாள் போராளியுமாகிய என்.நகுலேஸ் தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெறவுள்ள தபால் மூல வாக்களிப்பில் கலந்துகொள்ளவுள்ள அரச உத்தியோகத்தர்களிடம் தன் உளமார்ந்த வேண்டுகோளை முன்வைக்கும் முகமாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

என் இனிய அரச உத்தியோகத்தர்களே, கல்வி, அரச உத்தியோகம் என்பவற்றிலே பாகுபாடு தமிழ் இளைஞர் யுவதிகள் புறக்கணிப்பு என்ற அடிப்படை உரிமைகள் எம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டமையால் ஈழத்திலே தமிழ் இன விடுதலைப் போரட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயிரம் ஆயிரம் போராளிகளில் ஒருவனாக நானும் என் சக மக்களுக்காக ஆயுதமேந்திப் போராடினேன் என்பது இன்றும் நினைக்கையில் பெருமிதமாகவே இருக்கின்றது.

அரச உத்தியோகத்தர்களே ஒரு போராளியின் செயற்பாடு, அவன் கொண்ட இயக்கத்தின் கொள்கை, ஒழுக்கம் என்பன பற்றி நீங்கள் நன்றாகவே அறிவீர்கள்.

உங்களுக்காக அன்றே எங்கள் வாழ்வினை அர்ப்பணித்தவர்கள் நாம். மக்கள் பணி என்பதை எங்கள் உள்ளத்தில் நிறுத்தி உயிரைத் துச்சமென நினைத்து களத்தில் நின்றவர்கள் நாம். இன்று ஜனநாயக வழியில் எம் மக்களுக்கான போராட்டத்தை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு உங்கள் ஆணையை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றேன்.

நான் நகுலேஸ் எனும் முன்னாள் போராளி. போராளிகளின் வரலாறு நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என நம்புகின்றேன்.

எங்கள் மீதான மக்களின் நம்பிக்கை என்று மாறாது என்ற ரீதியில் இந்தப் பயணத்தில் எங்கள் கால்களை வைத்துள்ளோம். தோல்களில் ஆயுதங்களை ஏந்தி நெஞ்சுரத்துடன் அன்று எம் மக்களுக்காக எவ்வாறு நின்றோமோ அதே நெஞ்சுரத்துடன் சற்றும் தளராது ஜனநாயக ஆயுதமேந்தி உங்கள் முன் வந்துள்ளோம்.

அன்று விடுதலைப் புலிகள் என்ன நோக்கத்திற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கினார்களோ இன்று அக்கூட்டமைப்பு சிலரின் சுயநல செயற்பாடுகளால் சிதைவுற்ற காரணத்தினால் இன்று முன்னாள் போராளிகளாகிய நாங்கள் ஒன்றிணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எனும் பலம் மிக்க கூட்டமைப்பினை உருவாக்கி ஒற்றுமைக்கான சின்னமாக தமிழர்களின் நாதமாக விளங்கும் சங்குச் சின்னத்தில் இந்தத் தேர்தலைச் சந்திக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கான குரல் ஒன்றாக ஒற்றுமையாக ஒரே சிந்தனையில் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். அந்த நேரத்தில் ஆயுத ரீதியில் களம் கண்ட முன்னாள் போராளி ஒருவனின் குரலில் அந்தப் பாராளுமன்றத்தில் எம் மக்களுக்காக ஒலிக்க வேண்டாமா? எனக்கான ஒரு வாய்ப்பை வழங்குங்கள்.

நான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் இலக்கம் 3 ல் போட்டியிடுகின்றேன்.

அரச உத்தியோகத்தர்களே தபால் மூல வாக்களிப்பின் மூலம் நீங்கள் எனக்கு அளிக்கும் அங்கீகாரம் என்பது ஒரு போராளி மீது சாமானிய மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இன்னும் அதிதமாக்கும். அதற்கான வாய்ப்பினை வரப்போகும் தபால் மூல வாக்களிப்பில் எனக்கு வழங்குங்கள். நீங்கள் அளிக்கப்போகும் தபால் வாக்கில் ஒட்டுமொத்த முன்னாள் போராளிகளின் அர்ப்பணிப்பை நனவாக்குங்கள்.

என்றும் உறுதியாக உங்களுக்காகக் களத்தில் நிற்பேன். என் உயிரினும் மேலான என் மக்களுக்காக அர்ப்பணிப்போடு எனது பயணம் தொடரும்.

உங்கள் வாக்கில் என்னை வலுவாக்குவீர்கள் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன். என்று தெரிவித்துள்ளார்.

